டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 2.08.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 32 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 039 - Madurai | Online Edition

# தேசிய கடல்சார் ஆய்வுத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் மற்றும் ரூ.84,084 கோடி நிதி ஒதுக்கீடு

புது தில்லி, ஆக.1

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் 31.07.26ல் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், மத்திய பெட்ரோலியம், இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள ‘சமுத்திர மந்தன்’ எனப்படும் தேசிய கடல்சார் ஆய்வுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் முழுப் பங்களிப்புடன் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்திற்கு 2030-31 நிதியாண்டு வரையிலான காலத்திற்கு ரூ.84,084 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் பரந்த அளவிலான கடல்சார் ஆற்றல் திறனை முழுமையாக வெளிக்கொண்டு வரும் நோக்கில், 2025-ம் ஆண்டு சுதந்திரத் தினத்தன்று செங்கோட்டையிலிருந்து பிரதமர் ஆற்றிய உரையில் குறிப்பிட்ட நவீன காலச் சமுத்திர மந்தன் என்ற தொலைநோக்குப் பார்வையை இத்திட்டம் நனவாக்கு கிறது. இந்தியாவின் எரிசக்திப் பாதுகாப்பை வலுப்படுத்துதல், உள்நாட்டில் எண்ணெய் வளங்கள் ஆய்வு, உற்பத்தியை விரைவுபடுத்துதல், தொழில்நுட்பத் தலைமைத்துவத்தை ஊக்கு வித்தல், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கி முன்னேறுதல் ஆகியவற்றில் இத்திட்டம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல்லாக அமையும்.

இத்திட்டம் கடல்சார் ஆற்றல் ஆய்வின் அனைத்து நிலை களிலும் விரிவான அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. உயர் தரத்திலான நில அதிர்வு தரவுகளை ஆராய்தல், செயல் படுத்துதல், ஆய்வு செய்தல், ஆழ்கடல் & மிகவும் ஆழ்கடல்

பகுதிகளில் விரைவாக ஆய்வுத் துளையிடுதல், எல்லைப்புறப் படுகைகளில் அறிவியல் ரீதியில் துளையிடுதல், பொதுவான கடல்சார் உற்பத்தி, வெளியேற்றக் கட்டமைப்புகளை உருவாக்குதல், ஒருங்கிணைந்த எண்ணெய், எரிவாயு உற்பத்தி சேவை மண்டலத்தை அமைத்தல் ஆகிய முக்கியமான பணிகள் இதில் அடங்கும். மேலும் டிஜிட்டல் திட்ட மேலாண்மை, திறன் மேம்பாடு, நவீனத் தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல், சர்வதேச அளவிலான தொடர்புகள் ஆகியவற்றிற்குச் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சமுத்திர மந்தன் திட்டம் மூலம் 600 மில்லியன் மெட்ரிக் டன் எண்ணெய்க்குச் சமமான ஆற்றல் இருப்பு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் கடல்சார் ஆய்வு நடவடிக்கைகளை அதிகரிப்பதுடன், உள்நாட்டு எண்ணெய், எரிவாயு உற்பத்தியைப் பெருக்கவும் வழிகோலும். பெருமளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதோடு, ‘இந்தியாவில் தயாரிப்போம்’, ‘தற்சார்பு இந்தியா’ ஆகிய திட்டங்களின் கீழ் உள்நாட்டு உற்பத்தியை வலுப்படுத்தும்.

சர்வதேச அளவில் போட்டித்தன்மையுடன் கூடிய கடல்சார் தொழில்நுட்பங்கள், சேவைகளுக்கான சூழல் அமைப்பை உருவாக்கும். ஆய்வு, உற்பத்தி சார்ந்த வணிகக் கட்டமைப்பில் பெரும் முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் தொழில்வளர்ச்சி, புத்தாக்கம், நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

நாட்டின் கடல்சார் ஆற்றல் வளங்களை வெளிக்கொணர்ந்து நீண்டகால எரிசக்திப் பாதுகாப்பை உறுதிசெய்யும் தேசிய அளவிலான மாற்றத்தை உருவாக்கும் திட்டமாக இது திகழும். கடந்த பத்தாண்டுகளில், கடல்சார் பகுதிகளை ஆய்வு செய்தல், சட்ட மற்றும் ஒப்பந்த அமைப்புகளை நவீனப்படுத்துதல், தேசிய தரவு களஞ்சியத்தை வலுப்படுத்துதல் போன்ற பல்வேறு சீர்திருத்தங்களை அரசு மேற்கொண்டுள்ளது.

அந்தச் சீர்திருத்தங்களின் தொடர்ச்சியாக, பொதுக் கட்டமைப்பில் முதலீடு, அதிநவீனத் தொழில்நுட்பங்கள், உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு ஆகியவற்றின் மூலம் இத்திட்டம் கடல்சார் ஆய்வில் புதிய சகாப்தத்தை உருவாக்கும்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# காளான் வளர்ப்பு பயிற்சி

கோயம்புத்தூர், ஆக.1

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர் நோயியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் காளான் வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆகஸ்ட் 2026 மாதத்திற்கான பயிற்சி 5.8.26 புதன்கிழமை அன்று அளிக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர் பயிற்சி நாளன்று பயிர் நோயியல் துறையில் பயிற்சிக் கட்டணமான ரூ.850/நபர் நேரிடையாக செலுத்த வேண்டும். கல்லூரி மாணவர்களுக்கு ரூ.590/நபர் (அடையாள சான்று அவசியம்). பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி நேரம் : காலை 10.00 முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி : 0422-6611336, 6611226, 95432 70758, 63792 98064, 93618 89846, மின்னஞ்சல் : pathology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

## வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**5. கீரை சூப்**



**தேவையான பொருட்கள்**

பசலைக்கீரை — 2 கப்

பூண்டு — 3 பல்

வெங்காயம் — 1

மிளகு தூள் — ½ டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு


**செய்முறை**

கீரையை வேக வைத்து அரைக்கவும். வெங்காயம், பூண்டை வதக்கி கீரை விழுதை சேர்த்து 5 நிமிடம் கொதிக்கவிடவும்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# மாவட்ட விவசாயத்திற்கு வரும் உரங்களை கண்காணிக்கும் முறை : வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அறிக்கை



அரியலூர், ஆக.1

அரியலூர் மாவட்டத்தில் வேளாண்மை இணை இயக்குனர் உத்தரவின்படி, வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதா கிருஷ்ணன், நேற்று அரியலூர் பூக்கார தெருவில் உள்ள தனியார் உரம் விற்பனை நிலையத்தை ஆய்வு செய்தார். ஆய்வின் போது மாவட்டத்திற்கு வரும் உரம் எவ்வாறு கண்காணிக்கப்படுகிறது என்பதை தெளிவாக எடுத்துரைத்தார். மாவட்டத்திற்கு தேவையான உரத்தினை முதலில் என்னென்ன பயிர், எவ்வளவு ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகிறது, என்று அளவிடப்பட்டு அதற்கு உரம் எவ்வளவு தேவை என்பதை அறிந்து வேளாண்மை துறை மூலம், கணக் கிடப்பட்டு, இதே போல் அனைத்து மாவட்டத்திலும் கணக்கிடப்பட்டு, தமிழ்நாடு அரசு, வேளாண்மை உழவர் நல துறை மூலம் மத்திய அரசு அமைச்சகத்துக்கு அனுப்பப்பட்டு, அங்கு தீர்மானிக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு மாதமும் என்னென்ன உரங்கள், எவ்வளவு அனுப்ப வேண்டும் என்று தீர்மானிக்கப் படுகிறது. அதன் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உரங்கள், உர உற்பத்தி நிலையங்களில் இருந்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், மொத்த விற்பனை யாளருக்கும் மற்றும் டீலர்ஷிப் வாங்கிய சில்லரை விற்பனையாளர் களுக்கும் நேரடியாக உரங்கள் அனுப்பப்படுகிறது. அனுப்பப்பட்ட உரங்கள் அனைத்தும் டி பி டி அதாவது அரசின் நேரடி பயன் பரிமாற்றம் என்ற முறையில் மத்திய அரசால் கண்காணிக்கப் படுகிறது. வந்த உரம் ஞாய்னிவி தெரிவிக்கப்பட்டு அந்தச் செய்தி உரம் பெற்ற விற்பனை நிலையங்களுக்கு செல்லும், அதன் பிறகு உரம் வாங்கிய விற்பனையாளர்கள் உடனடியாக அக்னா லேஜ்மென்ட் செய்யப்படுகிறது. அதன் பிறகு மொத்த விற்பனை யாளர்களிடமிருந்து, சில்லறை விற்பனையாளர்களுக்கு iFMs செய்தி அனுப்பப்பட்டு உரங்கள் அனுப்பப்படுகிறது.

உரம் பெற்றவுடன் கண்டிப்பாக ஐ எஃப் எம் எஸ் ஐடியில் அக்னாலேஜ்மென்ட், செய்த பிறகு தான் சில்லறை உரம் விற்பனையாளர்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் மூலம் விவசாயிகளுக்கு, ஆதார் கார்டு கொண்டு பி ஓ எஸ் எந்திரம் மூலம் விற்பனை பில் தந்து விற்பனை செய்யப்படுகிறது.

இதை கண்காணிக்கம் பொருட்டு உரக்கட்டுப்பாட்டுச் சட்டம் 1985 மற்றும் அத்தியாவசிய பொருள் தடை சட்டம் 1955 இன் படி மாவட்டத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் வேளாண்மை அலுவலர் ஆய்வாளராக செயல்படுகிறார். மாவட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு, அனைத்து வட்டார உரம் ஆய்வாளர் களுடன் உடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு கண்காணிக்கப் படுகிறார். ஒவ்வொரு மாதமும் விற்பனை நிலையங்களுக்கு சென்று, அனைத்து வகையான உரங்களில் இருந்து உரம் மாதிரிகளை எடுத்து, உரக்கட்டுப்பாட்டு ஆய்வு மையத்திற்கு அனுப்பப்பட்டு, ஆய்வு முடிவில் உரம் தரம் இல்லாததாக இருந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாவட்ட அளவிலும் பிற மாவட்ட அளவிலும் அடிக்கடி சிறப்பு ஆய்வு, அதிரடி ஆய்வுகள் செய்து கண்காணிக்கப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு வட்டாரத்திலும் உர விற்பனையாளர்கள் அடங்கிய whatsapp குரூப் மற்றும் மாவட்ட அளவில் விற்பனையாளர்கள் அனைவருக்கும் whatsapp அமைத்து உடனுக்குடன் உரக்கட்டுப்பாட்டு தகவல்கள் தினசரி பதிவேற்றம் செய்யப்படுகிறது. அது மட்டுமல்லாமல் மாவட்டத்தில் வேளாண்மை அதிகாரிகள் அவ்வப்போது உரம் விற்பனை நிலையங்களை ஆய்வு மேற்கொண்டு உரம் விற்பனையை கண்காணித்து வருகின்றனர்.

அதுமட்டுமல்லாமல் மாவட்டத்தில் அடிக்கடி ஒரு வாரத்தில் குறைந்தது ஐந்து முதல் பத்து உரக்கட்டுப்பாட்டு செய்தவுடன் விவசாயிகள் உரம் பயன்படும் முறையும் உரம் விற்பனை யாளர்கள் அவர்களுக்கு தரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் படி நடந்து கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கையுடன் செய்தித்தாள்கள் வெளியிடப்படுகிறது. ஒவ்வொரு முறை ஆய்வின் போதும் உடனடி யாக முறையீடு நடைபெற்றால், உடனடியாக தரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல் சில்லறை விற்பனை நிலையத்தில் இருந்து விவசாயிகள் உரங்கள் வாங்குவதும் மத்திய அரசாங்கம் டி பி டி சிஸ்டம் மூலம் பி ஓ எஸ் எந்திரத்தில் ஒரு விவசாயி எவ்வளவு வரும் வாங்கினார்கள், என்பதை கண்காணிக்கப்படுகிறது.



அதே போல் உர விற்பனையாளர்கள் உரங்களை கொள்முதல் செய்வதும், அதை விற்பனை செய்வதையும் டிபிடி சிஸ்டம் மூலம் மத்திய அரசாங்கம் தினசரி கண்காணித்து, அவ்வப்போது வேளாண்மை துறைக்கு அனுப்பப்பட்டு அதன்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒரு விவசாயி அதிகபட்சமாக மாவட்டத்தில் ஒரு மாதத்தில் உரம் வாங்கியவர்களின் லிஸ்ட் ifms ஐடியில் பதிவேற்றம் செய்யப்பட்டு, அந்த விவசாய மற்றும் விற்பனையாளரிடம் நேரடியாக ஆய்வு செய்து டாப் 20 யூரியா ஐஎஃப்எஸ் ஐடியில் வந்ததை ஆய்வு செய்தது அறிக்கையை பதிவேற்றம் செய்யப்படுகிறது.

எனவே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வரும் உரங்கள் அனைத்தும் மாவட்டத்தில் வேளாண்மை அதிகாரிகளால் கண்காணிக்கப் படுகிறது. அது மட்டும் அல்லாமல் ஒவ்வொரு நாள் உரம் விற்பனை ifms ஐடி மூலம் மத்திய அரசும் கண்காணிக்கப்படுகிறது. ஒரு மாவட்டத்தில் அதிகப்படியான உரங்கள் விற்பனை செய்தாலும் உடனடியாக அதை அறிந்து உரம் விற்பனை செய்த விற்பனை நிலையத்திலும் வாங்கிய விவசாயிகளிடம் ஆய்வு செய்யப்படுகிறது, உடனடியாக ஆய்வுக் கூட்டமும் நடத்தப்படுகிறது. இதுபோல் உரங்கள் மாவட்டத்திற்கு வரும் உரம் அனைத்தும் பல்வேறு முயற்சிகளுடன் தொடர் நடவடிக்கை மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

உரக்கட்டுப்பாட்டு சட்டம் 1985 படி அத்தியாவசிய பொருள் தடைச் சட்டம் 1955 படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒரு மாவட்டத்தில் உரம் கடத்தப்பட்டது என்று அறிந்தால், அந்த மாவட்ட நிர்வாகத்துடன் மாவட்ட வேளாண்மை துறை அதிகாரிகள், ஆய்வு செய்து, அந்த உரம் லாட் நம்பர் என்ன, எங்கிருந்து வந்தது, எந்த நிர்வாகத்தில் இருந்து வந்தது, எப்படி வந்தது எல்லாம் ஆய்வு செய்து உடனடியாக அதற்கு ஏற்றார் போல் நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே உரம் டத்தப்பட்டது என்பதை அறிந்தால் உடனடியாக உரம் விற்பனை செய்தவர்கள் உரிமம் ரத்து செய்யப்படும் என்பதை வேளாண்மை உதவி இயக்குனர் அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

Rithvik Pipe

IS 4985 : 2021 CML-6400119610
IS 9537 CML-6400121694

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பங்கேற்ற தோட்டக்கலை மாணவர்கள்



தென்காசி, ஆக.1

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பங்கேற்ற தோட்டக்கலை மாணவர்கள் தங்களது அனுபவக் கற்றல் (Experiential Learning Programme) திட்டத்தின் ஒரு பகுதியாக, தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இக்கூட்டம், மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நடைமுறைகளை நேரடியாக அறிந்து கொள்வதற்கும், விவசாயிகள் எதிர்கொள்ளும் வேளாண்மை மற்றும் தோட்டக் கலை சார்ந்த பல்வேறு சவால்களைப் புரிந்து கொள்வதற்கும் மாணவர்களுக்கு சிறந்த வாய்ப்பாக அமைந்தது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் முன்வைத்த முக்கிய கோரிக்கைகள் மற்றும் பிரச்சினைகளை மாணவர்கள் கவனித்து அறிந்ததுடன், அவற்றை தீர்ப்பதற்காக மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ளும் செயல்முறைகள் குறித்தும் நேரடி அனுபவத்தைப் பெற்றனர். மேலும், மாவட்ட ஆட்சியருடன் கலந்துரையாடும் வாய்ப்பைப் பெற்ற மாணவர்கள், விவசாயிகள் நலன் சார்ந்த நிர்வாகத் திட்டங்கள், பொதுச் சேவை வழங்கும் நடைமுறைகள் மற்றும் அரசு மேற்கொள்ளும் நலத்திட்டங்கள் குறித்து பயனுள்ள புரிதலைப் பெற்றனர்.

இந்நிகழ்வில் மு.அபர்ணா உண்ணித்தான், ரசக்னா கே., கார்த்திகாஸ்ரீ எம்., மற்றும் அனிதா ஜி. ஆகிய மாணவிகள் பங்கேற்றனர்.

# நெற்பயிர் பண்ணைப்பள்ளி பயிற்சி

திருவள்ளூர், ஆக.1

ATMA திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு நெற்பயிர் பண்ணைப்பள்ளி பயிற்சி வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) திட்டத்தின் கீழ், திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் வட்டாரம், பசுவம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த 25 விவசாயிகளுக்கு நெற்பயிரில் வயல் சூழல் ஆய்வு (AESA - Agro Ecosystem Analysis) தொடர்பான பண்ணைப்பள்ளி பயிற்சி நடைபெற்றது.

பயிற்சியில் துவக்க உரையாற்றிய வேளாண்மை உதவி இயக்குநர் ந.பூமதி, நெற்பயிரில் வயல் சூழல் ஆய்வை முறையாக மேற்கொள்வதன் அவசியத்தையும், பயிரின் வளர்ச்சி நிலைகளில் பூச்சி, நோய் மற்றும் பயனுள்ள உயிரினங்களை தொடர்ந்து கண்காணித்து, அதற்கேற்ப ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். தொடர்ந்து அங்கக விவசாயி ஸ்ரீதர், நெற்பயிரில் பூச்சி மற்றும் நோய்களை கண்காணிக்கும் முறைகள் குறித்து விளக்கி, அவற்றை இயற்கை முறையில் கட்டுப்படுத்த கற்பூரக் கரைசல் தயாரிக்கும் முறை மற்றும் பயன்படுத்தும் முறையை செயல்விளக்கத்துடன் எடுத்துரைத்தார். மேலும், பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்கும் மீன் அமிலக் கரைசல் (Fish Amino Acid) மற்றும் ஜிப்ரெல்லிக் அமிலம் (Gibberellic Acid - $GA_3$) ஆகியவற்றின் பயன்பாடு மற்றும் அவற்றின் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார்.




வட்டார தொழில்நுட்ப மேலாளர் இரா.விசாலாட்சி, AESA வயல் சூழல் ஆய்வு கண்காணிப்பு நடைமுறைகள், பயனுள்ள பூச்சிகள் மற்றும் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை அடையாளம் காணும் முறைகள், பொருளாதார சேதநிலை (Economic Threshold Level - ETL) அடிப்படையில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் அவசியம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் வயலில் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு, பூச்சி மற்றும் நோய் அறிகுறிகளை கண்டறியும் நடைமுறைகளை செயல்முறை விளக்கத்துடன் கற்றுக்கொண்டனர். இப்பயிற்சியின் மூலம் தேவையற்ற பூச்சிக் கொல்லி மருந்து பயன்பாட்டைக் குறைத்து, இயற்கை வளங் களை பாதுகாத்து, உற்பத்திச் செலவைக் குறைத்து, அதிக மகசூல் மற்றும் பாதுகாப்பான உணவு உற்பத்தியை உறுதி செய்ய முடியும் என விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது. இப்பயிற்சியில் விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களது சந்தேகங்களுக்கு விளக்கம் பெற்றனர்.



# தேனீக்கள் அழிவால் பாதிக்கும் அயல் மகரந்த சேர்க்கை



வேளாண்மை தான் நமது நாட்டின் முதுகெலும்பு. அதற்கு துணை நிற்கும் தேவதைகள் தான் தேனீக்கள் என்றால் மிகையல்ல. அயல் மகரந்த சேர்க்கைக்கு தூண்டு கோலாக இருக்கும் தேனீக்கள் இன்று விவசாயத்தில் கண்ட கண்ட பூச்சி கொல்லிகள் தெளிப்பால் அவை அழிந்து வரும் நிலையில் தான் உள்ளது.

**என்னென்ன பயிரில் மகசூல் அதிகரிக்க உதவும் தேனீக்கள்?**

மக்காசோளம், சோளம், ஏலக்காய், கொய்யா, பப்பாளி, தக்காளி, பாகல், பூசணி, மாங்காய், பருத்தி உள்ளிட்ட பயிர்களில் தேனீக்கள் வளர்ப்பால், 30% முதல் 40% மகசூல் கூடும். தேனீக்கள் சரிவர இல்லாத காரணமாக இந்த பயிரில் தற்போது வழக்கமாக பெறும் மகசூலில் 60% குறைகிறது என்பது குறிப்பிடத்தக்க தகவல்.

தேனீ வளர்ப்பு என்பது விவசாயதில் சிறிய தொழில்நுட்பம் தான். அதை அவரவர் பண்ணையில் தோட்டங்களில் தேனீ பெட்டி வைத்து வளர்க்கலாம். தேனும் கிடைக்கும் மகசூலும் அதிகரிக்கும்.

**தேனீக்களின் பங்கு என்ன?**

ஒவ்வொரு பூவிலும் மதுரமும் மகரந்த தூளும் இருக்கும். பப்பாளி, பனை மரத்திலும், பூசணி, பாகற்காய், சுரக்காய் போன்ற பயிர்களிடம் ஆண், பெண் பூக்கள் தனித்தனியாக இருக்கும். ஆண் பூவில் உள்ள மகரந்த தூளை எடுத்துக் கொண்டு அதை பெண் பூவில் உள்ள சூல்முடியில் வைக்க வேண்டும். இந்த வேலையை மிகச் சரியாக செய்பவை தேனீக்கள். அவ்வாறு செய்யும் போது விதை உருவாகி பூ நிலைத்து நிற்கும்.

உதிராமலும் கொட்டாமலும் இருக்கும். இந்த வகையில் கூடுதலான மகசூல் கிடைக்கும். எனவே தேனீக்கள் வளர்ப்பை கிராமங்கள் மட்டுமின்றி நகரங்களில் வளர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டு ஜூலை 19 ஆம் தேதியன்று தேசிய நகர்ப்புற தேனீ வளர்ப்பு திட்டம் அனுசரிக்கப்படுகிறது. தேனீ வளர்ப்பை பற்றி அருகேயுள்ள வேளாண் பல்கலைக்கழக ஆராய்ச்சி மையங்கள், வேளாண் அறிவியல் மையங்களில் இலவச பயற்சி கட்டண பயிற்சி நடைபெறுகிறது. எனவே அவரவர் இருக்குமிடங்களில் தேனீ வளர்ப்பு பெட்டி களை வைத்து தேனீக்களை வளர்க்கலாம். விவசாயத்திற்கு உதவிடலாம் கூடுதலான மகசூலும் தேனும் பெற்றிடலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# தா.பேட்டையில் ஆத்மா வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழு கூட்டம்



சேலம், ஆக.1

சேலம் மாவட்டம், தா.பேட்டை வேளாண்மை விரிவாக்க மையக் கூட்ட அரங்கில் வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம் அட்மா சேர்மன் வலையெடுப்பு செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் வேளாண் இடுபொருட்கள் விற்பனையாளர்கள் முன்னோடி விவசாயிகள் பங்கு பெற்றனர். வேளாண்மை உதவி இயக்குனர் சுரேஷ்குமார் கூட்டத்தின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள் பற்றி எடுத்துக் கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் வரகுண பாண்டியன் அனைவரையும் வரவேற்று பேசினார். கடந்த மூன்று ஆண்டுகளாக பதவி வகித்த அட்மா சேர்மன் செல்வராஜ் அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் பற்றி பாராட்டி பேசினார். 2026 -27 ஆண்டிற்கான ஆத்மா நிதிநிலை அறிக்கை வாசிக்கப்பட்டு உறுப்பினர்களின் ஒப்புதல் பெறப்பட்டது. உறுப்பினர்களின் மேலான ஆலோசனைகளை கேட்டு செயல்படுத்துவதனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்தில் பங்கு பெற்ற அனைவருக்கும் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன. கூட்டத்திற்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் மணி மற்றும் பிரசாத் செய்திருந்தனர்.

# பசுந்தாள் உரப் பயிர்களை சாகுபடி செய்ய அறிவுரை



இராமநாதபுரம், ஆக.1

இராமநாதபுரம் வட்டாரத்தில் வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) கள ஆய்வு மேற்கொண்டு பசுந்தாள் உரப் பயிர்களை சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

இராமநாதபுரம் வட்டாரத்தில் வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) பொ.இராஜா, கள ஆய்வு மேற்கொண்டார். இதில் புத்தேந்தல் கிராமத்தில் விவசாயி செந்தாமரைக்கண்ணன், த/பெ.கேசவன், சாகுபடி செய்துள்ள பசுந்தாள் உரப்பயிரான தக்கைப்பூண்டு வயலினை ஆய்வு செய்தார்.

பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப்பூண்டு, சணப்பை, கொளுஞ்சி போன்ற பயிர்களை விதைப்பு செய்து 30 நாட்கள் கழித்து பூ பூக்கும் காலத்தில் மடக்கி உழுவதன் மூலம் பயிருக்கு தேவையான நைட்ரஜன் சத்தினை பசுந்தாள் உரப்பயிரின் வேர் முடிச்சுகள் மூலம் காற்றிலிருந்து எடுத்து பயிருக்கு கொடுக்கிறது. இதன் மூலம் 25 சதவீதம் இரசாயன உரங்களின் பயன்பாட்டை விவசாயிகள் குறைத்து பயன்படுத்தலாம். இதன் மூலம் மண்ணில் உள்ள அங்ககச்சத்தின் (Organic Carbon) அளவும் அதிகரித்து மண்வளம் பாதுகாக்கப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

எனவே இராமநாதபுரம் வட்டார விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 20 கிலோ தக்கைப்பூண்டு விதையினை வேளாண்மை விரிவாக்க மையம், இராமநாதபுரத்திலிருந்து 50 சதவீத மானியத்தில் பெற்று பயனடைய விவசாயிகளை கேட்டுக்கொண்டார்.

மேலும் கடந்த ஆண்டு SMAM – வேளாண்மை இயந்திர மயமாக்கல் திட்டத்தில் பழங்குளம் கிராமத்தில் உள்ள விவசாயி சவரியம்மாள், க/பெ. செபஸ்தியான், வழங்கிய நவீன களை எடுக்கும் இயந்திரத்தையும் (Power Weeder) ஆய்வு செய்து பயன்பாடு குறித்து கேட்டு அறிந்தார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY


isha LMW POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# சிறிய தேன்கூடு வண்டு – ஒரு பார்வை



கோயம்புத்தூர், ஆக.1

சிறிய தேன்கூடு வண்டு என்பது பொதுவாக 'சாறு வண்டுகள்' என்று அழைக்கப்படும் நிடிடுலிடே குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பூச்சியாகும். இது தேனீ வளர்ப்பில் கடுமையான பொருளாதார சேதத்தை ஏற்படுத்தும் ஒரு முதன்மை தீங்குயிரியாகும். இதன் தாயகம் ஆப்பிரிக்காவின் சஹாரா பகுதியாகும். இந்த வண்டுகள் ஆப்பிரிக்காவில் சிறியளவில் பாதிப்பு ஏற்படுத்தினாலும் ஐரோப்பிய தேனீக்கள் வாழும் புதிய சூழலுக்குள் இது பரவிய போது, ஆரோக்கியமான தேனீப் பண்ணைகளைக் கூட முழுமையாக அழிக்கும் திறனுள்ள கொடிய பூச்சியாக மாறியது. இவை இந்திய தேனிக்கள், இத்தாலிய தேனிக்கள், கொசுத் தேனீக்கள், மலைத் தேனீக்கள் மற்றும் வண்டுத் தேனீக்களின் கூடுகளையும் தாக்கி அழிக்கின்றன.

இந்தியாவில் இதன் தாக்குதல் முதன்முதலில் மேற்கு வங்காளத்தில் 2022 ஆம் ஆண்டிலும் ஆந்திர பிரதேசத்தில் 2023 ஆம் ஆண்டிலும் கண்டறியப்பட்டது. தமிழ் நாட்டில் 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள ஆனைமலை மற்றும் பொள்ளாச்சி பகுதிகளில் இந்திய தேனீ, இத்தாலிய தேனீ மற்றும் மலைதேனி கூடங்களில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் கண்டறியப்பட்டுள்ளது.

## உயிரியல் மற்றும் வாழ்க்கைச் சுழற்சி

இந்த வண்டுகள் முட்டை, புழு, கூட்டுப்புழு, முதிர்ந்த வண்டு ஆகிய நான்கு நிலைகளைக் கொண்ட முழு உருமாற்ற வளர்ச்சி முறையைக் கொண்டுள்ளன. சுற்றுப்புற வெப்பநிலை, ஈரப்பதம் மற்றும் உணவு கிடைப்பதைப் பொறுத்து இதன் வாழ்க்கைச் சுழற்சி 4 முதல் 12 வாரங்கள் வரை நீடிக்கும்.

## முட்டைகள்

இதன் முட்டைகள் வெள்ளை நிறத்தில், சுமார் 1.4 மிமீ நீளமும் 0.26 மிமீ அகலமும் கொண்டு, சிறிய வாழைப்பழம் போலக் காட்சியளிக்கும். பெண் வண்டுகள் தேனீக்களின் தாக்குதலில் இருந்து தப்பிக்க தேன்கூட்டின் அடிப்பலகை இடுக்குகள், விரிசல்கள் அல்லது மூடிய மறைவிடங்களில் ஒளிந்து கொண்டு

மறைவான இடங்களில் 10 முதல் 30 முட்டைகளை தேனீக்களின் அடைச்சட்டங்களில் இடுகின்றன. முட்டைகள் பொரிப்பதற்கு 70%-க்கும் அதிகமான ஈரப்பதம் தேவைப்படுகிறது. பொதுவாக 1 முதல் 3 நாட்களில் முட்டைகள் பொரிந்து புழுக்கள் வெளிவரும்.

### புழுப் பருவம்



ஒரு மிமீ நீளமுடன் வெள்ளை கலந்த மஞ்சள் நிறத்தில் இருக்கும் புதிதாகப் பொரித்த இளம் புழுக்கள் 7 முதல் 14 நாட்களில் முழு வளர்ச்சியடையும் போது 12 மிமீ நீளம் வரை வளரும். உடலின் முன்பகுதியில் மூன்று ஜோடி உண்மையான கால்களும், முதுகுப்புறத்தில் வரிசையாகச் சிறிய முட்களும் இருக்கும். இவை தேன்கூட்டிலுள்ள தேனீக்களின் முட்டைகள், மூடப்படாத புழுக்கள், சேமிக்கப்பட்ட மகரந்தம் மற்றும் தேன் ஆகியவற்றைத் தீவிரமாகத் தின்று தீர்க்கும்.

### கூட்டுப்புழு பருவம்

முதிர்ந்த புழுக்கள் கூட்டமாக அந்திப் பொழுதுகளில் கூட்டை விட்டு வெளியேறி, தரையிறங்கி மண்ணுக்குள் சென்று கூட்டுப் புழுவாக மாறும். இவை தளர்வான, வெப்பமான, ஈரப்பதமுள்ள மணல் கலந்த வண்டல் மண்ணில் 10 முதல் 20 செமீ ஆழம் வரை செல்லும். களிமண் அல்லது முற்றிலும் காய்ந்த வறண்ட மண்ணில் கூட்டுப்புழுக்கள் இறந்துவிடும். பொதுவாக 3 முதல் 4 வாரங்களுக்குபின் வண்டுகளாக மாறும் இக்கூட்டு புழுக்கள் குளிர்காலத்தில் பல மாதங்கள் வரை மண்ணுக்குள்ளேயே உறக்க நிலையில் இருக்கும்.

### முதிர்ந்த வண்டு

மண்ணிலிருந்து புதிதாக வெளிவரும் இளம்பழுப்பு நிற வண்டுகள், சில நாட்களில் கரும்பழுப்பு அல்லது கறுப்பு நிறமாக மாறும். தேனீயின் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவுடைய இவ்வண்டுகளின் உணர்நீட்சிகளின் நுனி முளைக்குச்சி போல பருத்து இருக்கும். இவை தேனீக்கள் வெளியிடும் ஆபத்துக்கால எச்சரிக்கை வேதிப் பொருட்கள் மற்றும் புளித்த தேன் அல்லது மகரந்தத்தின் வாசனை மூலம் 10 முதல் 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கூடுகளையும் கண்டறிந்து தாக்கி அழிக்கின்றன. தேன் கூடுகளுக்குள் 6 மாதங்கள் வரை இவை உயிர்வாழும்.

பெண் வண்டுகள் வெளிவந்த 7 நாட்களில் இனப்பெருக்கத் திறனைப் பெற்று, தன் வாழ்நாளில் 2,000 முட்டைகள் வரை இடும். தேனீக்கள் கூடுகளுக்குள் நுழையும் இந்த வண்டுகளை கூண்டின் இடுக்குகளிலும் மூலைகளிலும் விரட்டிச் சிறைபிடிக்கும். சிறையில் இருக்கும் வண்டுகள் தேனீக்களை போல சைகை செய்து வேலைக் கார தேனீக்களை வசியப்படுத்தி தங்களுக்கு உணவளிக்க வைக்கின்றன. வலுவான கூடுகளில், இவை தேனீ பெட்டிகளின் இடுக்குகள் வழியாக நுழைந்து அடிப்பலகையிலுள்ள கழிவுகளைத் தின்று உயிர்வாழும். கூடு பலவீனமடையும் போது, சட்டங்களின் ஓரங்களில் பெருமளவில் முட்டையிட்டுத் தேனீக்களுக்குப் பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தும். தேன்கூடு வரோவா உண்ணி களாலோ, ராணித் தேனீ இல்லாமலோ அல்லது மோசமான ஊட்டச்சத்தாலோ பலவீனமடையும் போது வண்டுகளின் எண்ணிக்கை கட்டுக்கடங்காமல் உயர்கிறது.

**பாதிப்பு அறிகுறிகள்**

**அடைகளின் சிதைவு**

ஆயிரக்கணக்கான வண்டுப்புழுக்கள் தேன் மெழுகு அடை களைத் துளைத்துச் செல்வதால், அடைகளின் கட்டமைப்பு முற்றிலும் சீர்குலையும். அவை மூடிய அறைகளைத் திறந்து தேனீக்களின் கூட்டுப்புழுக்களைத் தின்னும்.

**தேன் நொதித்தல் மற்றும் கசிதல்**

இவற்றின் மலக் கழிவுகளில் உள்ள ஒரு வகையான ஈஸ்ட் தேனை நொதிக்கச் செய்து மனிதப் பயன்பாட்டிற்கு உபயோக மற்றதாக மாறுகிறது. இதனால் தேனின் அடர்த்தி குறைந்து, குமிழ்கள் தோன்றும்.

**துர்நாற்றம் மற்றும் கூட்டை கைவிடுதல்**

பாதிக்கப்பட்ட அடை முழுவதும் அழுகிய ஆரஞ்சுப் பழ வாசனை வீசும், மேலும் ஆரஞ்சு நிறத்தில் உருவாகும் பிசுபிசுப்பான திரவத்தின் நாற்றம் தேனீக்களுக்கு அறவே பிடிக்காது என்பதால், ராணித் தேனீ முட்டையிடுவதை நிறுத்திவிட்டு, மொத்தத் தேனீக் களும் கூட்டை விட்டுப் பறந்து ஓடிவிடும்.

**தேன் சேகரிப்பு அறைகளில் சேதம்**

கூடுகளில் இருந்து எடுக்கப்பட்ட தேன் அடைகளை 24-48 மணி நேரத்திற்குள் பிழியாமல் சேமித்து வைத்திருந்தால், தேனீக்களின் பாதுகாப்பு இல்லாததால் அதிலுள்ள இவ்வண்டுகளின் முட்டைகள் பொரித்து வெளி வரும் புழுக்கள் சில நாட்களிலேயே மொத்தத் தேனையும் நாசமாக்கிவிடும்.

## ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை

● அடிப் பலகையையும் தேனடைகளையும் வாரம் ஒரு முறை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

● வண்டு பாதிப்புள்ள பகுதிகளிலிருந்து பிற பகுதிகளுக்கு பெட்டிகளை மகரந்த சேர்க்கைக்காகவோ தேன் உற்பதிக்காகவோ மாற்றக்கூடாது.

● தேனிக் கூட்டங்களை அதிக எண்ணிக்கையுள்ள தேனீக் களுடன் பராமரிக்க வேண்டும்

● தேவைக்கு அதிகமான எண்ணிக்கையில் தேனடை அறைகளை பயன்படுத்தக்கூடாது

● தேன் பெட்டி வைத்துள்ள இடங்களில் நல்ல வடிகால் வசதியை ஏற்படுத்த வேண்டும்

● பாதிக்கப்பட்ட தேனடைகளை எரித்துவிட வேண்டும். பாதிக்கப் பட்ட பெட்டிகளையும் சட்டங்களையும் தீ துப்பாக்கி மூலம் பொசுக்க வேண்டும்.

● கூடுகளை நிழலில் வைக்காமல் நேரடி வெயிலில் வைப்பதன் மூலம் மண் காய்ந்து, கூட்டுப்புழுக்கள் உருவாவது தடுக்கப்படும்.

● கூட்டைச் சுற்றியுள்ள மண்ணைக் கிளறி விடுவதன் மூலம் கூட்டுப்புழுக்களை இயற்கை எதிரிகளுக்கு வெளிப்படுத்தலாம்.

● கூடுகளின் மூலைகளில் மினரல் ஆயில் அல்லது டயட்டமேசியஸ் மண் நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் பொறிகளை வைக்கலாம்.

● மண்ணில் உள்ள புழுக்களையும் கூட்டு புழுக்களையும் அழிக்க பூச்சிண்ணி நூற்புழுக்கள் மற்றும் பூஞ்சைகளைக் கொண்ட நுண்ணுயிர் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தலாம்.




# கிராமத்தங்கல் திட்டத்தில் பங்கேற்பு ஊரக மதிப்பீட்டு (PRA) நிகழ்ச்சி நடத்திய வேளாண்மை மாணவிகள்

தென்காசி, ஆக.1

தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில், கலசலிங்கம் பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு வேளாண்மை மாணவிகள் மலேஸ்வரி.அ, பிரியதர்ஷினி.பூ, யாழினி.த, பத்மஸ்ரீ ஜோதி.ச, ஞானமதி.கு மற்றும் அபர்ணாதேவி.ரா ஆகியோர் கிராமத் தங்கல் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக பங்கேற்பு ஊரக மதிப்பீட்டு (Participatory Rural Appraisal - PRA) நிகழ்ச்சியை நடத்தினர்.



நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, உள்ளூர் மக்களின் ஆர்வமிக்க பங்களிப்புடன் கோலப்பொடியைப் பயன்படுத்தி வென்வரைபடம் (Venn Diagram), பயிர் சாகுபடி சதவீதத்தை விளக்கும் வட்ட விளக்கப் படம் (Pie Chart) மற்றும் வாசுதேவநல்லூர் வட்டார வரைபடம் (Block Map) ஆகிய PRA வரைபடங்கள் வரையப்பட்டன. கிராம மக்களும் மாணவிகளுடன் இணைந்து இவ்வரைபடங்களை உருவாக்குவதில் உற்சாகத்துடன் பங்கேற்று, தங்களது கிராமத்தின் வளங்கள், நிறுவனங்கள் மற்றும் வேளாண்மை தொடர்பான தகவல்களை பகிர்ந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

இதனைத் தொடர்ந்து, PRA வரைபடங்களின் நோக்கம், அவற்றின் பயன்பாடு மற்றும் கிராம வளர்ச்சியில் அவற்றின் பங்களிப்பு குறித்து மாணவிகள் பொதுமக்களுக்கு விரிவாக விளக்கமளித்தனர். வென்வரைபடம் மூலம் ஊராட்சி மன்றம், வேளாண்மைத் துறை, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் (PACCS), விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனம் (FPO), வங்கிகள், தொழிற்சாலைகள் மற்றும் நீர்வள அமைப்புகள் போன்ற கிராமத்தின் முக்கிய நிறுவனங்கள் மற்றும் அவை விவசாயிகளுடன் கொண்டு உள்ள தொடர்பு, அவற்றின் முக்கியத்துவம் மற்றும் செயல்பாட்டு உறவுகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. இதன் மூலம் விவசாயிகள் பல்வேறு நிறுவனங்களின் சேவைகளை எவ்வாறு பயன்படுத்தி பயனடையலாம் என்பதும் விளக்கப்பட்டது.

வட்ட விளக்கப்படம் (Pie Chart) மூலம் கிராமத்தில் பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்படும் பரப்பளவின் சதவீதம், அதிகளவில்

பயிர்கள் சாகுபடி செய்யப்படும் பரப்பளவின் சதவீதம், அதிக அளவில் பயிரிடப்படும் பயிர்கள் மற்றும் கிராமத்தின் ஒட்டு மொத்த பயிர் சாகுபடி முறை குறித்து விளக்கமளிக்கப்பட்டது. இத்தகவல்கள் வேளாண் திட்டமிடல், வளங்களை திறம்பட பயன்படுத்துதல், பயிர் பல்வகைப்படுத்தல் மற்றும் எதிர்கால வேளாண் மேம்பாட்டுத் திட்டங்களை வகுப்பதில் முக்கிய பங்கு வகிப்பதாக மாணவிகள் எடுத்துரைத்தனர். மேலும், வாசுதேவநல்லூர் வட்டார வரைபடம் (Block Map) மூலம் வட்டாரத்தின் வரைபட அமைப்பு, அதில் இடம் பெற்றுள்ள முக்கிய கிராமங்கள் மற்றும் அவற்றின் அமைவிடங்கள் குறித்து பொதுமக்களுக்கு மாணவர்கள் விளக்கமளித்தனர்.

நிகழ்ச்சியின் போது பொதுமக்கள் மாணவிகளின் விளக்கங்களை ஆர்வமுடன் கேட்டறிந்து, PRA வரைபடங்கள் கிராமத்தின் வளங்கள், சமூக அமைப்பு, வேளாண் நிலை மற்றும் வளர்ச்சித் தேவைகளை எளிதில் புரிந்து கொள்வதற்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக கருத்து தெரிவித்தனர். மேலும், இத்தகைய பங்கேற்பு அடிப்படையிலான செயல்பாடுகள் கிராம மக்களுக்கும் வேளாண் மாணவர்களுக்கும் இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்து வதோடு, நிலையான வேளாண்மை மற்றும் கிராம வளர்ச்சிக்கான திட்டமிடலுக்கும் உறுதுணையாக அமையும் என பாராட்டினர்.

# பழங்கள் மற்றும் காய்கறிகளின் முதல்நிலை பதப்படுத்துதல் குறித்த இரண்டு நாள் திறன் மேம்பாட்டு பயிற்சி

ராமநாதபுரம், ஆக.1

விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகள் மற்றும் பழங்களை அறுவடைக்குப் பின் வீணாக்காமல் பாதுகாக்கவும், அவற்றைச் சரியாக மதிப்புக் கூட்டி சர்வதேச சந்தையில் ஏற்றுமதி செய்து கூடுதல் லாபம் ஈட்டவும் வலியுறுத்தி ராமநாதபுரம், வேளாண்மை அறிவியல் நிலையத்தில் (KVK) இரண்டு நாள் சிறப்பு திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் 31.07.26 மற்றும் 01.08.26 ஆகிய தினங்கள் நடைபெற்றது.

தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தின் (வீஹிபுஊணசிமு) ஆதரவுடன், கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள உணவு பதன்செய் பொறியியல் துறை இப்பயிற்சியை ஒருங் கிணைத்து நடத்தியது.


இப்பயிற்சி முகாமிற்கு உணவு பதன்செய்பொறியியல் துறையின் பேராசிரியரும் தலைவருமான முனைவர் மு.பாலகிருஷ்ணன் தலைமை தாங்கி, பயிற்சியைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார். ராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் கி.இராமகிருஷ்ணன் நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வழிகாட்டினார்.



பயிற்சியின் போது உணவுப் பாதுகாப்புச் சட்டங்கள், தரநிலைகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை முனைவர் அ.ராமலட்சுமி விளக்கினார். விளைபொருட்கள் நீண்ட நாட்கள் கெடாமல் இருக்கவும், சந்தையில் அதிக விலைக்கு விற்கவும் உதவும் நவீன சிப்பமிடுதல் (ஊழிஉவழிஆஷ்ஜஆ) முறைகள் குறித்து முனைவர் ஆ.விஜயகுமார் எடுத்துரைத்தார். மேலும், அறுவடைக்கு பிந்தைய இழப்புகளைக் குறைத்தல் மற்றும் மதிப்புக் கூட்டல் சார்ந்த விரிவாக்க உத்திகளை முனைவர் மு.ஜெகதீசன் தெளிவுபடுத்தினார்.

சேமிப்புக் கிடங்குகளில் பழங்கள் மற்றும் காய்கறிகளைத் தாக்கும் நூற்புழுக்கள் மற்றும் நோய்களில் இருந்து பாதுகாக்கும் வழிகளை முனைவர் கண்ணையன் விவரித்தார். மானாவாரி தோட்டக்கலை பயிர்களில் அதிக சந்தை மகசூல் பெறுவதற்கான ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை நடைமுறைகளை முனைவர் தி.பாலாஜி விளக்கியதுடன், காய்கறிகள் மற்றும் பழங்களின் இயற்கையான தன்மை மாறாமல் பதப்படுத்தும் எளிய முறைகள் குறித்து பேராசிரியர் முனைவர் க.குருசாமி பயிற்சி அளித்தார்.

நிகழ்வின் நிறைவாக, சர்வதேச அளவில் வேளாண் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான நடைமுறைகள், அதிலுள்ள வர்த்தக வாய்ப்புகள் மற்றும் அரசு வழங்கும் உதவிகள் குறித்து வீஹிபுஊசிமு பிரதிநிதி அ.கீர்த்திவாசன் விரிவாக எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள், புதிய தொழில்முனைவோர்கள் மற்றும் விவசாய உற்பத்தியாளர் அமைப்பின் (ய்ஊநு) பிரதிநிதிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். பயிற்சி நிறைவில் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் வழிகாட்டி கையேடு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நெற்பயிரில் உயிர் உரங்களின் பயன்பாடு மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை பற்றிய அறிய கண்டுணர்வு பயணம்

ராணிப்பேட்டை, ஆக.1

ராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டாரம், வேளாண்மைத் துறை அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளை உள் மாநிலத்திற்குள் கண்டுணர்வு பயணமாக மண்டல ஆராய்ச்சி மையம், பையூர் வரை அழைத்து சென்று வரப்பட்டது.

நெமிலி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அருணாகுமாரி, நெற்பயிரில் உயிர் உரங்களின் பயன்பாடு மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை குறித்த தலைப்பில் இரண்டு நாள் உள் மாநிலத் திற்குள் கண்டுணர்வு பயணமாக மண்டல ஆராய்ச்சி நிலையம், பையூர் வரை சென்று வர நெமிலி வட்டார விவசாயிகளை கொடியசைத்து துவக்கி வைத்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் நிர்மலா தேவி, நெமிலி வட்டாரம் பல்வேறு கிராமங்களில் இருந்து 50 விவசாயிகளை ஒருங்கிணைத்து 30.7.26 மற்றும் 31.7.26 ஆகிய இரண்டு நாட்கள் மண்டல ஆராய்ச்சி நிலையம், பையூர், கிருஷ்ணகிரி மாவட்டம் வரை அழைத்து சென்று வந்தார்.

பையூர், மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் முதல் நாள் பேராசிரியர் முனைவர் கோவிந்தன், விவசாயிகள் அனைவரையும் வரவேற்று பேசினார். மேலும் நெற் பயிரில் உயிர் உரங்களை பயன்படுத்தி விதை நேர்த்தி மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, சமச்சீர் உர மலாண்மை குறித்து விவசாயிகளுக்கு விளக்க மளித்தார். முனைவர் சசிகுமார், பூச்சியல் பேராசிரியர், நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்தும் மற்றும் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த விவசாயிகளின் பல்வேறு சந்தேகங் களுக்கும் விளக்கமளித்தார்.

இரண்டாம் நாள் உயிரி கட்டுப்பாட்டு ஆய்வகத்திற்குள் ( Bio Control Laboratory) விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அவர்களுக்கு உயிர் உரங்கள் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது, அவை எவ்வாறு பயிர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாகிறது மற்றும் நெற்பயிரில் உயிர் உரங்கள் பயன்படுத்தப்படும் பொழுது உரத் தேவை எவ்வாறு குறைகிறது என்பதையும் செயல் விளக்கம் அளித்தனர். விவசாயிகள் நெல் வயலுக்கு அழைத்துச் செல்லப் பட்டு அங்கு நாற்றங்கால் மற்றும் நடவு வயலில் உயிர் உரங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதை நேரடியாக பயிற்சியளித்தனர்.

மேலும் மண்புழு உரம் தயார் செய்யும் கூடத்திற்கு விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட்டு மண்புழு உரம் தயாரிக்கும் முறைகள் மற்றும் நெல் வயலில் மண்புழு உரம் பயன்படுத்தும் பொழுது மண்ணின் வளம் மற்றும் நுண்ணுயிர்கள் செயல்பாட்டை அதிகரித்து இரசாயன உரங்களின் தேவையை படிப்படியாக குறைக்க உதவுகிறது. ஒரு ஏக்கர் நெல் வயலுக்கு சுமார் 1 – 2 டன் மண்புழு உரத்தை கடைசி உழவின் போது நிலத்தில் சமமாக பரப்பி கலக்கலாம் அல்லது நடவு செய்து 20-30 நாட்களுக்குப் பிறகு வரிசைகளுக்கு இடையில் தேவையான அளவு மண்புழு உரத்தை இடலாம் எனவும் அவ்வாறு பயன்படுத்தும் போது மண்ணில் கரிம பொருட்கள் அளவு அதிகரித்து நுண்ணுயிரிகள் பெருகி மண்ணின் நீர் பிடிப்புத் திறன் அதிகரித்து நெல் மகசூல் மற்றும் தானிய தரம் மேம்பட உதவுகிறது என விவசாயிகளுக்கு எளிதில் புரியும் வகையில் விளக்கமளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் முகிலன் கலந்து கொண்டு பயிற்சிக்கு தேவையான ஏற்பாடுகளை செய்திருந்தார். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் தங்கள் வயலில் உயிர் உரங்கள் மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து முறைகளை கடைபிடிக்கிறோம் என உறுதியளித்தனர்.

# தாரமங்கலம் வட்டார விவசாயிகளுக்கு முக்கிய அறிவிப்பு

சேலம், ஆக.1

பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (ஃணனிய்யகூஷ) மூலம் 2026-ஆம் ஆண்டு காரிப் பருவத்தில் தக்காளி மற்றும் வாழை பயிர்களுக்கு பயிர்க் காப்பீடு செய்யும் வாய்ப்பு தாரமங்கலம் வட்டார விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

புயல், கனமழை, வெள்ளம், பூச்சி தாக்குதல், நோய் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பயிர்களின் மகசூல் பாதிக்கப்படும் சூழலில், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பொருளாதார பாதுகாப்பு வழங்கும் நோக்கத்துடன் பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு ஏக்கருக்கான விவசாயி காப்பீட்டு பிரீமியம் பின்வருமாறு, தக்காளி ரூ.1,857.44, வாழை ரூ.1,598.25,

காப்பீடு செய்ய கடைசி நாள் : தக்காளி – 31.08.26, வாழை – 15.09.26 ஆகும்.

எனவே, தாரமங்கலம் வட்டாரத்தில் தக்காளி மற்றும் வாழை சாகுபடி செய்துள்ள அனைத்து விவசாயிகளும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பயிர்க் காப்பீடு செய்து, இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் பொருளாதார பாதுகாப்பைப் பெற்றுப் பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு : தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, தாரமங்கலம் வட்டார அலுவலகத்தை அணுகவும்.



# ஆராய்ச்சியிலிருந்து தொழில்முனைவு வரை – உயிரித் தொழில்நுட்பத் தொழில்முனைவில் மாணவர்களை ஊக்குவிக்கும் COXBIT

கோயம்புத்தூர், ஆக.1

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் (TNAU) உயிரித் தொழில்நுட்ப மகத்துவமையம் (COXBIT) மற்றும் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையம் (CPMB&B) இணைந்து, 'கல்வி ஆராய்ச்சியிலிருந்து ஸ்டார்ட்அப் வரை' என்ற தலைப்பில் சொற்பொழிவை 2026 ஆகஸ்ட் 1 ஆம் தேதி கோயம் புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் SPGS ஆன்லைன் அகாடமி அரங்கில், மாணவர்களுக்கு தமிழ் நாட்டில் புதுமை சார்ந்த தொழில்முனைவை ஊக்குவித்தல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப ஸ்டார்ட்அப் சூழலை வலுப்படுத்துதல் என்ற நோக்கத்தின் ஒரு பகுதியாக இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் பி.டெக். (உயிரித் தொழில்நுட்பம்) பயிலும் 120 இளநிலை மாணவர்கள் கலந்து கொண்டனர்.




இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக நீர்பாசி கார்பன் சொல்யூசன்ஸ், கோயம்புத்தூர் நிறுவனத்தின் நிறுவனர் முனைவர் ஜிதேஷ் விஜயன், கலந்து கொண்டு, கல்வி ஆராய்ச்சியிலிருந்து தொழில் நுட்ப அடிப்படையிலான வெற்றிகரமான நிறுவனத்தை உருவாக்கிய தனது தொழில்முனைவு பயணத்தை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார். தனது உரையில், ஆராய்ச்சி முடிவுகளை வணிக மயமாக்கும் செயல்முறையின் முக்கிய கட்டங்களான முன்மாதிரி (Prototype) உருவாக்கம், தொழில்நுட்ப சரிபார்ப்பு (Technology Validation), தொழில்துறை ஒத்துழைப்பு, வணிக மாதிரி உருவாக்கம், சந்தை மதிப்பீடு (Market Validation), முதலீட்டு தயார்நிலை (Investment Readiness) மற்றும் நிறுவன விரிவாக்கம் (Enterprise Scaling) ஆகியவற்றை விரிவாக விளக்கினார்.

மேலும், வாய்ப்புகளை அடையாளம் காணுதல், வணிக மாதிரி புதுமை, தொழில்நுட்ப தயார்நிலை மதிப்பீடு (Technology Readiness Assessment), இடர் மேலாண்மை (Risk Management), மற்றும் மூலோபாய திட்டமிடல் (Strategic Planning) போன்ற வெற்றிகரமான தொழில்முனை வோருக்குத் தேவையான முக்கிய திறன்களை எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற பி.டெக். உயிரித் தொழில்நுட்ப மாணவர்கள் தொழில்முனைவு, ஸ்டார்ட்அப் உருவாக்கம், நிதி உதவிகள், தொழில்நுட்ப வணிகமயமாக்கல் மற்றும் உயிரித் தொழில்நுட்பத் துறையில் தொழில் வாய்ப்புகள் குறித்து ஆர்வமுடன் கேள்விகள் எழுப்பி கலந்துரையாடினர்.

முனைவர் ஜிதேஷ் விஜயன், அமெரிக்காவில் நேரடி முனைவர் பட்ட (Direct Ph.D.) படிப்புகளைத் தொடர்வது, ஆராய்ச்சி சார்ந்த தொழில் வாழ்க்கையை உருவாக்குவது மற்றும் உயர்கல்வியுடன் தொழில்முனைவையும் இணைத்து முன்னேறுவது குறித்து மாணவர்களுக்கு வழிகாட்டினார்.

மேலும், உயிரித் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கான ஆராய்ச்சி வாய்ப்புகள், ஸ்டார்ட்அப் இன்கியுபேன் வசதிகள் மற்றும் பல்வேறு நிதி ஆதரவு திட்டங்கள் குறித்தும் விளக்கமளித்தார். அத்துடன், அரசு மானியங்கள், விதை நிதி (Seed Funding), ஏஞ்சல் முதலீடு (Angel Investment), துணிகர முதலீட்டு நிதி (Venture Capital), இன்கியுபேட்டர் மற்றும் ஆக்சிலரேட்டர் (Incubator & Accelerator) திட்டங்கள், அறிவுசார் சொத்துரிமை (Intellectual Property) பாதுகாப்பு மற்றும் முதலீட்டாளர்களை ஈர்க்கக்கூடிய வணிக முன்மொழிவுகள் தயாரிப்பதன் அவசியம் ஆகியவையும் இச்சொற்பொழிவில் எடுத்துரைக்கப்பட்டன.

முன்னதாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவர உயிரித் தொழில்நுட்பத் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் வே.ராஜன்பாபு வரவேற்புரையாற்றினார். தொடர்ந்து, தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையம் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மகத்துவ மையத்தின் (COXBIT) இயக்குநர் முனைவர் ந.செந்தில் சிறப்புரையாற்றினார். இறுதியாக, தாவர உயிரித் தொழில்நுட்பத் துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் கு.ஹேமபிரபா நன்றியுரையாற்றினார். இந்நிகழ்ச்சியை தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையம் மற்றும் COXBIT குழுவினர் ஒருங்கிணைத்தனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# எல் நினோ (El Nino) : விவசாயிகள் அறிந்திருக்க வேண்டியவை (பாதிப்புகளும் மேலாண்மை வழிமுறைகளும்)

சேலம், ஆக.1

எல் நினோ (El Nino) என்பது பசிபிக் பெருங்கடலின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை இயல்பை விட அதிகரிக்கும் ஒரு இயற்கை காலநிலை நிகழ்வாகும். இந்த வெப்பநிலை மாற்றம் உலகளாவிய காற்றழுத்தம் மற்றும் காற்றோட்ட அமைப்புகளை மாற்றுவதால், பல நாடுகளில் மழைப்பொழிவு மற்றும் வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்தியாவில், குறிப்பாக தென் மேற்குப் பருவமழை (ஜுன்-செப்டம்பர்) குறைவதற்கும், அதிக வெப்பநிலை மற்றும் நீண்ட வறட்சி காலம் நிலவுவதற்கும் எல் நினோ முக்கிய காரணிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இருப்பினும், ஒவ்வொரு எல் நினோ ஆண்டிலும் ஒரே மாதிரியான பாதிப்புகள் ஏற்படும் என்று கூற முடியாது. இந்தியப் பெருங்கடல் இருமுனை நிகழ்வு (Indian Ocean Dipole - IOD), வங்கக்கடல் காற்றழுத்த மாற்றங்கள் மற்றும் உள்ளூர் வானிலை அமைப்புகளும் மழைப்பொழிவை பாதிக்கக்கூடியவை.

## இந்தியாவில் எதிர்பார்க்கப்படும் விவசாயத் தாக்கங்கள்

எல் நினோ வலுவாக இருக்கும் ஆண்டுகளில் தென்மேற்குப் பருவமழை தாமதமடைவது அல்லது குறைவது, அதிக வெப்ப அலைகள், மண் ஈரப்பதம் குறைதல், நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் குறைதல், பாசன நீர் பற்றாக்குறை, பயிர்களின் வளர்ச்சி மந்தமாதல், மகசூல் குறைதல் போன்ற விளைவுகள் ஏற்படலாம். நெல், மக்காச்சோளம், பருப்பு வகைகள், எண்ணெய் விதைப் பயிர்கள், கரும்பு, தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் வாழை போன்ற நீர் தேவையுள்ள பயிர்கள் அதிகம் பாதிக்கப்படக்கூடும். அதே சமயம், அதிக வெப்பநிலை காரணமாக பூச்சி மற்றும் நோய் தாக்கங்களிலும் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

## தமிழ்நாட்டில் ஏற்படக்கூடிய தாக்கங்கள்

தமிழ்நாடு பெருமளவில் வடகிழக்குப் பருவமழையை (அக்டோபர்-டிசம்பர்) நம்பியுள்ள மாநிலமாக இருந்தாலும், தென்மேற்குப் பருவமழை குறைபாடு நீர்த்தேக்கங்கள் மற்றும் நிலத்தடி நீர்

நிரப்புதலை பாதிக்கும். இதனால் குறுவை மற்றும் பிற பாசனப் பயிர்களுக்கு நீர் பற்றாக்குறை ஏற்படலாம். நெல், சோளம், பயறுவகைப்பயிர்கள், மக்காச்சோளம், பருத்தி வாழை, தென்னை, கரும்பு, காய்கறி மற்றும் மலர்ப் பயிர்களில் நீர் அழுத்தம், இலை வாடுதல், காய் மற்றும் கனிகளின் அளவு குறைதல், தரம் பாதிப்பு போன்ற விளைவுகள் ஏற்படலாம். இருப் பினும், சரியான பண்ணை மேலாண்மையைப் பின்பற்றினால் இந்த பாதிப்புகளைப் பெருமளவில் குறைக்க முடியும்.

## விவசாய மேலாண்மை மூலம் சமாளிக்கும் வழிமுறைகள்

மழை நீரை பண்ணைக் குட்டைகள், பண்ணை குளங்கள் மற்றும் வயல்வெளி வடிகால் அமைப்புகள் மூலம் சேமிப்பது மிகவும் அவசியம். சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறை களைப் பயன்படுத்தி நீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். அதேபோல் குறைந்த அளவு நீர் தேவைப்படும் சிறுதானி யங்கள், கம்பு, துவரை, ஆமணக்கு பயிர்களை சாகுபடி செய்வது, திறந்தவெளி நீர் பாசனம் பயன்படுத்துபவர்கள் மாலைப் பொழுதில் நீர் பாசனம் செய்தல், பயிரை வறட்சியிலிருந்து காப்பாற்ற PPFM, பொட்டாசியம் குளோரைடு, யூரியா ஆகிய வற்றை கொண்டு இலைவழி கரைசல் தெளித்தல், வைக்கோல், தென்னை நார், வாழைக் கழிவுகள் போன்றவற்றைக் கொண்டு மண்ணை மூடி (Mulching) ஈரப்பதத்தைப் பாதுகாக்கலாம். மண் பரிசோதனையின் அடிப்படையில் சமச்சீர் உரமிடுதல், உயிர் உரங்கள், உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் மற்றும் இயற்கை கரிமப் பொருட்களைச் சேர்த்தல் மூலம் மண்ணின் நீர்ப்பிடிப்பு திறனை அதிகரிக்கலாம். வறட்சியைத் தாங்கும் அல்லது குறுகிய காலத்தில் அறுவடைக்கு வரும் பயிர் மற்றும் ரகங்களைத் தேர்ந்தெடுப்பது நல்லது. பூச்சி மற்றும் நோய்களை தொடர்ந்து கண்காணித்து ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளைப் பின்பற்ற வேண்டும். வானிலை முன்னறிவிப்புகளை அடிக்கடி கவனித்து அதற்கேற்ப விதைப்பு, உரமிடல் மற்றும் நீர்ப்பாசன நடவடிக்கைகளைத் திட்டமிட வேண்டும்.

## விவசாயிகளுக்கு நம்பிக்கை தரும் செய்தி

எல் நினோ என்பது நிரந்தரமான பேரிடர் அல்ல; அது ஒரு தற்காலிக காலநிலை நிகழ்வு மட்டுமே. அறிவியல் அடிப்படை யிலான பண்ணை மேலாண்மை, நீர் சேமிப்பு, துல்லியமான ஊட்டச்சத்து மேலாண்மை, பொருத்தமான பயிர் தேர்வு மற்றும் வானிலை தகவல்களைப் பயன்படுத்தி திட்டமிட்ட சாகுபடி மேற் கொண்டால் மகசூல் இழப்பை கணிசமாகக் குறைக்க முடியும்.

தமிழக விவசாயிகள் பல்வேறு காலநிலை சவால்களை வெற்றி கரமாக சமாளித்த அனுபவம் கொண்டவர்கள். வேளாண் பல்கலைக்கழகங்கள், இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் மாநில வேளாண் துறையின் தொழில்நுட்ப ஆலோசனை களைப் பின்பற்றி செயல்பட்டால், எல்–நினோ போன்ற சவால் களையும் வாய்ப்பாக மாற்றி நிலையான மற்றும் லாபகரமான விவசாயத்தை மேற்கொள்ள முடியும். “நீர் சேமிப்பு - மண் வள பாதுகாப்பு - அறிவியல் மேலாண்மை” என்ற மூன்று அடிப்படை கொள்கைகளே எல்–நினோ காலத்தில் வெற்றிகரமான விவசாயத்தின் முக்கியமான அணுகுமுறைகள். இவ்வாறு சேலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா தெரிவித்துள்ளார்.

